ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

स्थानेषु शिष्यनिवहैर्विनियुज्यमाना
विद्यागुरुं हि गुणवत्तरमातनोति ।
आदाय शुक्तिषु बलाहकविप्रकीर्णैः
रत्नाकरो भवति वारिभिरम्बुराशिः ॥

ஆசிரியரிடத்தில் விதிவழுவாது முறைப்படி கல்வியில் தேர்ச்சியடைந்த மாணாக்கர்கள் தங்களால் கற்கப்பட்ட வித்தையை அதற்கு அருகராயுள்ளவர்களிடத்தில் உபயோகப்படுத்தினால் அதனால் அவர்களுடைய குருவின் கீர்த்தி வெளியாகின்றது. அஃதெங்ஙனமெனில், குருபோன்ற கடலிலிருந்தும் மேகமென்னும் சீடன் ஜலமென்கிற வித்தையைக்கிரஹித்து அதை முத்துச்சிப்பிகள்போன்ற சிறந்த அதிகாரிகளிடத்தில் பல திவலைகளாக வர்ஷித்து அவைகள் ரத்நங்களாக மாறுவதின் காரணம் பற்றி ஸமுத்திரத்திற்கு ரத்நாகரமென்று பெருமை வாய்ந்த பெயர் ஏற்படுவதுபோல் இங்கு, குருக்களும் சிறந்த கீர்த்தியையடைவார்கள்.

இதனால் சீடன் இருக்கவேண்டிய நிலைமை அறிவிக்கப்படுகின்றது. அதாவது ஒருவன் ஒரு குருவிடத்தில் விதிப்படி வித்தைகளை கற்றுத்தேற்சியடைந்தால், பிறகு தன் ஆயுள் முழுவதையும் தன் குருவுக்குப்பெருமை ஏற்படக்கூடிய வழிகளில் அந்த வித்தைகளை உபயோகப்படுத்தவேண்டும். அவ்விதமன்றி அதிகப்பொருளின் ஆசையினாலோ, தாக்ஷிண்யத்தினாலோ, சிஷ்யபாவத்திற்கு அருகனில்லாதவனை யோக்யனாக நினைத்து வித்தையை உபதேசிக்கக்கூடாது. அவ்விதமுபதேசிக்கப்படுமாயின் அஃது இயற்கையிலிருக்கும் மஹிமை குன்றி அதனாலேற்படும் பயனையும் அவன் இழந்து ஜனங்களுக்கும் அதிக கஷ்டத்தைக்கொடுப்பான். ஆகையாற்றான் மனுஸ்மிருதியிலும் அநதிகாரியிடத்தில் வித்தையை உபதேசிக்கக்கூடாதென்று ஸ்பஷ்டமாய்க்கூறப்பட்டிருக்கிறது. ஏற்பட்ட நியமங்களை விட்டு தமக்குத்தோன்றியவாறு வித்தியோபதேசம் செய்யாமல் உத்தமபாத்திரங்களில் உபதேசித்து குருவும் சிஷ்யனும் விசேஷமான சிரேயஸ்ஸையடைய வேண்டுமென்று கருதுகின்றார்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-ஸூ ஐப்பசி-மீ ௧௨

ஆவின் பயன்

அன்றியும் ஓர் சுபகாரியத்தை நடத்துங்காலத்திலும் வைதிகமான கர்மானுஷ்டானம் செய்யுங்காலத்திலும் நெற்றியில் திரிபுண்ட்ரமாய் விபூதியைத் தரிக்காமல் செய்வார்களாகில் அக்கர்மாவணைத்தும் பயனற்றதாகும். மேலும் சிவாலயங்களிற் சென்று பரமேசுவரனைத் தரிசித்துத்திரும்புங்கால் இவ்விபூதியையே அவருடைய பிரஸாதமாகப் பெருகிறேமென்பதும் பிரசித்தமே. பின்னும் எவருக்காவது கிருக பாதை ஏற்பட்டால் அதை விலக்க இவ்விபூதியே முக்கிய ஸாதனமாய் விளங்குகின்றது. ஈசுவராபிஷேகத்திற்கும் இதைச்சிறந்ததாகக் கொண்டாடுகிறார்கள். மலமென்று இகழப்படும் கோமயத்திற்கு இவ்விதப்பிரயோஜனமேற்படுமாகில் மற்ற பால் முதலியவைகளைப் பற்றிக்கூறவும் வேண்டுமோ?

அதிக மஹிமை பொருந்தியதும் விசேஷமான உபகாரங்களைச் செய்கிறதாயுமிருப்பதாற்றான் பிரபுக்களும் இராஜாக்களும் ஆயிரக்கணக்கான கோக்களை வாங்கி அவைகளைத்தக்கபடி பாதுகாத்தற்குரிய ஆட்களையும் ஏற்படுத்தியும் அவைகளுடைய ஆகாரத்திற்குவேண்டிய சௌகரியங்களும் உண்டாக்கி அவைகளைநன்கு பரிபாலித்து வந்துள்ளார்கள். உலகக்ஷேமத்தைக்கருதி சிருஷ்டிக்கப்பட்ட சிலரைப்போற்றுமிடத்து

गो ब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यम्

என்று அந்தணர்களைக்காட்டிலும் கோக்களையே முன்பு கூறி அவைகள் ஸௌக்கியமாயிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கி றார்கள். இவ்வித மஹிமை பொருந்திய கோக்களுக்கு தற்கா லம் நேர்ந்திருக்கும் கஷ்டத்தைச்சொல்லவியலாது. ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடைகளுக்காக விடப்பட்டிருந்த புரம் போக்கு நிலங்களை அரசாங்கத்தார் வேறுவிதமாக மாற்றிச்சில ருக்குச் சொந்தமாகச் செய்துவிட்டபடியால் அவைகளுக்குச் சரியான மேச்சலுக்கு இடங்கிடைப்பது மிகவும் அரிதாகிவிட் டது. வீட்டிலேயே கட்டிவைத்து கூளத்தையும் மற்றும் தோஷமுள்ள ஆகாரங்களையும் போடுகிறார்கள். பசியின் கொடு மையால் கிடைப்பதைத்தின்பதால் அவைகளின் க்ஷீரமும் கெட் டுப்போகின்றது. அவ்விதப்பாலை யுபயோகிப்பதால் சரியான குணம் ஏற்படுகிறதில்லை. மேலும் பசுக்களை நல்லபுல்லும், தண்ணீரும் காற்றுமில்லாத அசுத்தமான இடத்தில் கட்டுவ தால் நோயுண்டாகி சரீரம் மெலிந்து போகின்றது. அவ்வித மாட்டின் பாலாலும் சரீரத்திற்குத்தோஷமேயன்றி குணமேற் படாது. அகாலத்திலுபயோகப்படுத்துவதும் ஸரியல்ல. இவ் விதம் பல காரணங்களாலதற்கேற்படும் குற்றத்தைச்சற்று முற்றும் நோக்காமல் ஆவின்பாலுக்குக் குணமில்லையென்று சிலர் தோஷத்தைக் கூறுகிறார்கள். முன்காலத்தைக்காட்டி லும் இப்பொழுதுள்ள ஜனங்கள் பலரும் காபி முதலியவைக ளுக்காக வேண்டி கன்றுக்குக்கூடக்கொடுக்காமல் அதைப் படுத்த படுக்கையிலேயே இருக்கும்படியாக க்ஷீணதசையை அடைய விட்டுவிட்டு பாலைமாத்திரம் மிகவும் விரும்புகிறார்களே யன்றி கோஸம்ரக்ஷணத்தை அற்பமேனும் கவனிப்பாரில்லை. மற்றுமோர் விஷயமுண்டு. அதை வாயாற் கூறக்கூட நாவெ ழும்பவில்லை. அஃதென்னவெனில் இத்தகையமஹிமை பொ ருந்திய புண்யாத்மாவான கோக்களையும் சிலவிடங்களில் கழனி யில் உழுகிறார்கள். மற்றுஞ்சிலர் யௌவன பருவத்திலிருக்கும் கன்றுகளை இதாமாம்ஸங்களைப்போல் ஆகாரமாக உபயோகப் படுத்துவதாகவும் கேள்விப்படுகிறோம். அந்தோ! என்ன கஷ் டம்! கலியின் கொடுமையைப்பாருங்கள்! பசுவையுங்கொன்று

வயிறு வளர்க்க ஆரம்பித்துவிட்டார்களே. இனி இவர்கள் எவ் விதக்கொடுமையைத்தான் செய்யத்துணியார்கள். நம்தேசத் தில் இவ்விதமான செய்கை அதிகமாக நடக்காவிட்டாலும் பசு ரக்ஷணை மிகவும் குறைந்திருப்பதால் அபிவிருத்திக்கு வரா மல் நாளுக்குநாள்குறைந்துகொண்டே வருகிறது. எல்லோரும் இதை நன்கு கவனித்து அவைகள்விருத்தியடைவதற்கு வேண் டிய ஸாதனங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி அவ்விஷயத்தில் ஊக்கத்தைச்செலுத்தினால் நம்தேசத்தில் கோதனம் பெருகி அதனால் விசேஷஸௌக்கியம் கிடைக்குமாகையால் இதில் யாவரும் முயற்சிப்பாரென்று எங்கும் நிறைந்த பரம்பொருளை வேண்டுகிறோம். சபம்.

मासानां मार्गशीर्षोऽहमृतूनां कुसुमाकरः ।

மாஸாநாம் மார்கசிர்ஷோஹம், ருதூநாம் குஸுமாகர:

பகவான் 'मासानां मार्गशीर्षोऽहमृतूनां மாஸங்கள் எல்லாவற் றும் மார்க்கசிர்ஷம் நானே என்று பகவத்கீதை, 10 வது அத் தியாயம், 35 வது ச்லோகத்தில் மார்க்கசிர்ஷ மாஸத்தைச் சிறப்பித்துக் கூறியதற்கு ஏதாவது தக்க காரணம் இருக்க வேண்டும். பெரியவர்களுக்கு அதன் ரஹஸ்யம் தெரியக் கூடும். நமக்குப் புலப்படவில்லை. ஆனால் நாம் கேட்டவரை யில் அந்த மாஸத்தில் தான் தேவாஸுரயுத்தம் நடந்து, தேவர் கள் அஸுரர்கள் பேரில் வெற்றி பெற்றது பற்றி, அதன் அடையாளமாக ஈசுவரனை தனுர் மாஸத்தில் இப்போதும் பூஜித்துவருகிறோம் என்றும், அதன காரணமாக அந்த மாஸம் முதன்மை பெற்றதால் அதைச் சிறப்பித்துச் சொல்லப்பட்டது

மாஸாநாம் மார்கசீர்ஷோஹம் ருதூநாம் குஸுமாகர: ருஅங.

என்றும் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். பொதுவாய் அரசர்கள் இந்த மார்கழி மாஸத்திலேயே யுத்தத்துக்குப் புறப்படுவதற்கு நல்ல காலமென்று எண்ணப்படுகிறது.

मार्गशीर्षे शुभे मासि यायाद्यात्रां महीपतिः ।
फाल्गुनं वाथ चैत्रं वा मासौ प्रति यथाबलम् ॥ மனு vii 182.

ஹேமந்தருதுகாலத்தில் ஸஸ்யாதிகள் எல்லாம் ஏராளமாய்க் கிடைக்கும்போது சுபத்தைத்தருவதான மார்கழி மாஸத்தில் பிரயாணம் செய்யக்கடவன்' என்று மனுஸ்மிருதியில் சொல்லப் பட்டிருப்பதால், அந்த மாஸம் ஜயத்தைத்தரும் பகவத் அம்சம் என பொதுதுவாய்க் கருதலும் அதன் பெருமைக்குக் காரண மாகக்கூடும்.

இது நிற்க, 'மார்க்கசீர்ஷம்' என்றபதமே மிருகசீர்ஷம் என்ற நக்ஷத்திரத்தை சந்திரன் ஒரு பௌர்ணமியில் எந்த மாஸத்தில் அடைகிறானோ, அந்த மாஸம் மார்க்கசிரம் என்று பெயர் பெறும். அதேமாதிரி ஸங்கல்பமாதங்கள் எல்லாம் வெவ்வேறு நக்ஷத்திரங்கள் பெயராலேயே வழங்கிவருகின்றன. ஆனால் மிருகசிர நக்ஷத்திரத்துக்கு மற்றை நக்ஷத்திரங்களை விட, ஒரு விசேஷமிருக்கிறது. அந்த நக்ஷத்திரம் 'ஆக்ராஹா யணி' என்றும், அந்த மாஸம் 'ஆகராஹாயணம்' அல்லது ஆக்ர ஹாயணிகம் என்றும் வேதத்திலேயே காணப்படுகிறது. அமர ஸிம்ஹரும்

मृगशीर्षं मृगशिरस्तस्मिन्नेवाग्रहायणी । (190) என்றும்
मार्गशीर्षे सहा मार्ग आग्रहायणिकश्च सः । (243) என்றும்

முறையே நக்ஷத்திரத்தையும் மாஸத்தையும் பெயர் கூறுவார். மார்கழிமாஸம் முதல்மாதங்களையும் ருதுக்களையும் கணக்கிட் டிருந்தாலும்

दाक्षायण्योऽश्विनीत्यादितारा (187)

நக்ஷத்திரங்களை அசுவினி முதலாகவே அமரஸிம்ஹர் கணக்கிட்டிருப்பதால் எப்போதும் அது மாறவில்லை என்று நிச்சயமாய்க்கொள்ளலாகும்.

ஆக்ரஹாயணம் என்ற பதத்திற்கு வருஷத்தின் முதல் என்பது பொருளாகும். அதாவது இப்பொழுது சைத்ர மாஸம் வருஷத்தின் முதலாய் வழங்கி வருவதுபோல், ஒரு காலத்தில் மார்க்கசீர்ஷமாஸம் வருஷத்தின் ஆரம்பமாய் இருந்திருக்கவேண்டும். அல்லது இப்போது அசுவினி நக்ஷத்திரத்தை வருஷ ராசிமானங்களுக்கு முதலிலிருப்பதாக வ்யவஹரிப்பது போல் ஒரு காலத்தில் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தையே வருஷத்தின் முதல் நக்ஷத்திரமாக வைத்துக் கணக்கிட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. அன்றேல் ஆக்ரஹாயணம் என்றதற்கு சரியான பொருள் கிடைக்கத்தக்கதில்லை.

இந்த மார்க்கசீர்ஷமாதமே வருஷ ஆரம்பம், மாஸ ஆரம்பமாய் இருந்து வந்திருந்தது என்பது, ப்ருஹத்ஸம்ஹிதை த்வாதசமாஸ நாமானி என்ற அத்தியாயத்தில்

मृगशीर्षाद्याः केशवनारायणमाधवाः सगोविन्दाः ।
विष्णुमधुसूदनाख्यौ त्रिविक्रमो वामनश्चैव ॥
श्रीधरनामा तस्मात् सहृषीकेशश्च पद्मनाभश्च ।
दामोदर इत्येते मासाः प्रोक्ता यथासंख्यम् ॥

மார்கசீர்ஷ மாதமுதல் பன்னிரண்டு மாதங்களும் கேசவ நாராயண மாதவ கோவிந்த விஷ்ணு மதுஸூதன த்ரிவிக்ரம வாமன ஸ்ரீதர ஹ்ரிஷீகேச பத்மநாப தாமோதர என்று ஈசுவரனது த்வாதச நாமாக்களாலும் மாதங்கள் அழைக்கப்பட்டதாகவும் தெரியவருவதால், மார்கழி மாதம் ஒரு காலத்தில் வருஷத்தின் முதல் மாதமாக இருந்திருக்கவேண்டும்.

மார்க்கசிரம் என்ற சாந்திரமான மாஸமும், மார்கழி என்ற ஸௌரமான மாஸமும் ஒரே காலத்தைக் குறிக்கவில்லை.

மாஸாநாம் மார்கசீர்ஷோஹம் ருதூநாம் குஸுமாகர: டுஅடு

அதேமாதிரி சைத்ரம் என்ற ஸங்கல்ப மாதமும், சித்திரை என்ற தமிழ் மாதமும் சில நாள்கள் முன் பின் வித்தியாஸத்தை யுடையது. அதாவது ஒரு தமிழ் மாஸத்தின் முந்தின ஸௌரமாஸத்தின் அமாவாசை முதற்கொண்டே பின் மாதத்திய பெயரால் வழங்கப்படும்.

இனி மிருகசீர்ஷம் வருஷ முகமாயிருந்தது எக்காலமெனின், இன்றைக்குச் சுமார் 6000 வருஷங்களுக்கு முன் சம்பவித்திருக்கவேண்டும். இதுவும் 26000 வருஷங்களுக்கு ஒருதரம் சம்பவம் ஆகையால், இதைக் கொண்டு வேதங்கள் இன்னகாலத்தில் தான் எழுதப்பட்டது, அல்லது வெளியிடப் பட்டதென்றுவது சொல்லுதல் முடியாது.

இதன்றி, மார்கசிர ராசியே வருஷத்தின் முகமாயிருந்தது என்றல், அக்காலம் இன்றைக்கு சுமார் 18000 வருஷங்களுக்கு முன் சம்பவித்திருக்க வேண்டும். அதில் சூரியன் பிரவேசிக்கும் போது ப்ரதமவிஷுகாலமாகும். அப்போது ருதுவும் வஸந்த மாகவேண்டும். அங்ஙனம் மார்கசிர மாதத்தை வஸந்தருதுவாக ஒரிடத்தும் சொல்லப்படவில்லை. ஆயைால் மார்கசிரமாதம் ஆக்ரஹாயணம் என்றதானது பொருந்தாது.

சூர்யன் மார்கசிரமாதத்துக்குச் சரியான ராசியில் பிரவேசிக்க வருஷ ஆரம்பமானல், அப்போது ஹேமந்த ருதுவாயிருக்கமுடியாது. மிருகசிர நக்ஷத்திரம் அதற்கு எதிர்த்த 7-வது ராசியிலிருக்கும். மிருகசிரநக்ஷத்திரத்தில் சூர்யன் பிரவேசிக்க வருஷ ஆரம்பம் உண்டானது என்றல், அப்போது ஜ்யேஷ்ட மாதம் வருஷ ஆரம்பமாகவேண்டும். ஆகையால் மார்கழிமாதமும்' மிருகசீர்ஷ நக்ஷத்திரமும் தனித்தனியே வருஷாரம்பமாக சுமார் 12000 வருஷங்கள் இடையிட்டு இருந்திருக்கலாமே யொழிய, இரண்டும் ஒரே காலத்தில் ஆரம்பமாயிருக்க முடியாது. சூர்யகதியால் ருதுக்கள் மாறுமாகையால், மார்கழி மாதமும் எப்போதும் ஹேமந்த ருதுவாயிருந்திருக்சவும் முடியாது. வராஹமிஹிரரும்

उदगयनं मकरादावृतवः शिशिरादयश्च सूर्यवशात् ।

என்றபடி மகரமாதம் சிசிருது ஆரம்பம் என்று சொல்லுவதால் இப்போது மகரம் ஹேமந்தமென்று கூறுவது அவர்காலத்தில் இல்லையென்று அறியலாகும்.

கீதாசார்யர் மார்கசிர மாஸம் சிரேஷ்ட மென்று சொன்னுரேயன்றி, ஹேமந்த ருதுவைத் தன்னுடைய அம்சமாகச் சொல்லவில்லை. அதனுல் அவர் கீதோபதேசம் செய்தகாலத்தில் ஹேமந்தருது காலமென்று கொள்ள வேண்டிய அவசியமில்லை.

தவிர "ऋतूनां कुसुमाकरः" என்றுஉடன்கூறுவதால்வசந்தருது பகவான் அம்சம் என்று கொள்ளவேண்டும். ஆகையால் மார்கசிரமாதமானது வருஷத்தின் தலையாயிருந்தது என்று கொள்ள வேண்டுமானுல் அப்போது வசந்தருதுவாயிருந்திருக்கவேண்டும் என்றும் அமையும். மார்கசிர மாதத்தை நற்கால தனுர் மாத மென்று கணக்கிட்டால், கிருஷ்ணன் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தகாலம் சுமார் 18000 வருஷங்களுக்கு முன் என்று ஏற்படும். அது பிசகு.

இனி, மார்க்கசீர்ஷ மாஸம் என்பதற்கு மிருகசிர நக்ஷத்திரத்தை ஆரம்பத்திலுடைய மாஸம் என்று பொருள் கொள்ளலே தகும். ஆக்ரஹாயணி என்று மிருகசிர நக்ஷத்திரத்துக்கு பெயர் வாய்ந்த காரணத்தால், அதை முன்னுடைய மாஸத்துக்கும் ஆக்ரஹாயணிகம் என்று பெயர் கூறுவதும் இயல்பே. அங்ஙனமன்றி அந்நக்ஷத்திரத்தில் பௌரணிமா எப்போது வருகிறதோ அந்தமாஸம் மார்கசிரம் என்று இக்காலத்தில் சாந்திரமான சம்பிரதாயமாய் வழங்கிவருகிறது போலும்.

ஆதிகாலத்தில் மாஸங்கள் நக்ஷத்திரத்தின் பெயராலேயே அழைக்கப்பட்டும், இவை ஸாயன மாஸங்கள் ராசிகளாகவுமிருந்திருக்க வேண்டுமென்று தெரியவருகிறது. பிறகு அவைகள் அசுவினி ஆரம்பமாக மேஷாதிராசி நிரயனராசிகளாக

ஏற்பட்டகாலத்தில், மாஸங்களை சாந்திரமானமாக நக்ஷத்திரப் பெயரால் மேஷாதிகளை ஆசுவஜீயம் என்று அழைக்காமல்; சைத்ரம் முதலாக வழங்கி வந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதோபதேசம் செய்த காலத்தில், மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் சூர்யன் பிரவேசிக்க வருஷம் ஆரம்பமென்றும், அந்த வருஷாரம்பம் வஸந்தருது கூடினதென்றும், அந்தமாஸம் தத்காலம் ஜ்யேஷ்டமாஸமாக நாம் வழங்கினாலும், அது ஸாயனரீதியாய் மார்கசிரம் என்றே வழங்கப் பட்டிருக்க வேண்டுமென்றும், அந்தக்காலம் இற்றைக்கு சுமார் 6000 வருஷங்களுக்கு முன் நடந்திருக்க வேண்டுமென்றும் நாம் கொள்ளத்தக்கது. அப்படியானால் கலியுகம் தத்காலம் 5024 வருஷம் சென்றுவிட்டமையால், துவாபரயுக முடிவில் சுமார் 75 வருஷங்களுக்குள் மஹாபாரத யுத்தம் நடந்திருக்கிறதாகவுள்ள புராண வரலாற்றுக்கும், இந்த ஸித்தாந்தம் ஒத்திருப்பது என்பதும் அறியலாகும்.

டி. வி. சாமிநாதய்யர்.

வேதவேதாங்கஸ்வரூபம்.

(ருசுஉ-வது பக்கத்தொடர்ச்சி)

वेद्यन्ते ज्ञाप्यन्ते धर्मार्थकाममोक्षा अनेन ।

என்கிற வ்யுத்பத்தியால் வேதமென்பது நான்குபுருஷார்த்தங்களுக்கும் சாதனமான கிரந்தவிசேஷம் என்று ஏற்படுகிறது. அதுவும், ரிக்கு யஜுஸ்ஸு, ஸாமம், அதர்வா, என்றுநான்கு வகுப்புள்ளது. ஒவ்வொன்றுக்கும் அநேக சாகைகளுண்டு. வேதத்திற்கு **श्रुतिः** ச்ருதிஎன்று பெயரும் வழங்கப்படுகிறது. கேட்கப்படுகின்றது என்ற அதன் பொருளால் சரீரியான ஒரு கர்த்தா அதற்கு இல்லையென த்வனிக்கிறது.

அந்தவேதத்திற்கு சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ்ஸு, ஜ்யோதிஷம், என்று ஆறு அங்கங்கள் உண்டு. இவைகளைத்தவிரவும் புராணம் முதலியவைகளும் அங்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

पुराणन्यायमीमांसाधर्मशास्त्रांगमिश्रिताः ।
वेदाः स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश ॥

இதனால் புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம், கீழ் கூறிய ஆறு அங்கங்கள், நான்குவேதங்கள் ஆகிய இப்பதி நான்கும் வித்யைகளுக்கும் தர்மங்களுக்கும் இருப்பிடங்கள் என்று தெரிகிறது.

அற்பமாக அறிந்தவன் தன் பொருளைக் கெடுத்துவிடுவானோவென்று மறை நடுங்குகிறது. ஆதலால் இதிஹாஸம், புராணம் இவைகளைக்கொண்டும் வேதப் பொருளை நிர்ணயிக்க வேண்டும் என்று கீழ் கூறும் வசனம் அறிவிக்கிறது.

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ।
बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रहरिष्यति ॥ என்று

கீழ்கூறிய அங்கங்களில் சிக்ஷையானது உதாத்தம், அநுதாத்தம், பிரசயம், என்ற ஸ்வரங்களையும், உரஸ்ஸு முதலான வர்ணஸ்தானங்களையும் அறிவிக்கும். அச்சிக்ஷை நாரதர் பாணினி முதலானவர்களால் இயற்றப்பட்டிருக்கிறது. ஸ்வரத்தாலோ, வர்ணத்தாலோ, மந்திரம் தவறி உச்சரிக்கப்பட்டால் இஷ்டம் சித்திக்காமற் போவதுடன் அநிஷ்டமும் ஏற்படும். விருத்திராஸுரனுடைய யாகத்தில் ஸ்வரம் பிசகினதால் இந்திரனால் விருத்திராஸுரன் கொல்லப்படும்படி நேர்ந்தது. ஆகையால் உச்சரிக்கும் விஷயத்தில் சிக்ஷை மிக்க உபயோகமானது. கல்பம் என்பது இரண்டாவது வேதாங்கம். ஒவ்வொரு சாகைக்கும் தனித்தனியாக காத்யாயன ச்ரௌத ஸூத்திரம் முதலான கல்பங்களிருக்கின்றன அவைகள், மந்திரங்கள் உப

யோகிக்கவேண்டிய விதத்தை யறிவிக்கின்றது. கல்பத்தை யறியாதவனுல் மந்திரங்களை நன்ருய் பிரயோகிக்கமுடியாது. மாறுபாடாகப் பிரயோகித்தால் கர்மபலனும் சித்திக்காது.

வியாகரணம் மூன்ருவது வேதாங்கமாகும். அது சப்தங்களின் ஸ்வரூபத்தை விளக்கிக்காட்டும். அது பாணினி முதலானவர்களால் இயற்றப்பட்டது. சப்தம் ஸாதுவா அஸாதுவாவென்று தெரிந்துகொள்ள வியாகரணம் முக்கியமான சாதனம். ரக்ஷை முதலான வெகுப்பிரயோஜனங்கள் மஹாபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

நிருக்தம் என்பது நான்காவது வேதாங்கம். அது நிகண்டு, பாஷ்யரூபமாயுள்ளது. யாஸ்க முனிவராலாக்கப் பட்டது. சப்தம், அர்த்தம் இவைகளில் அர்த்தம் பிரதானமென்றும் சப்தம் குணபாவத்தையடைகிறதென்றும் அதனுல் அறியக்கூடும். அது வைதிகப் பிரயோகங்களில் அவசியமானது.

(छन्दश्शास्त्रम्) சந்தஸ் சாஸ்திரம் ஐந்தாவது அங்கம். மந்திரங்களில் வர்ணங்கள் எத்தனை? மாத்திரைகள் எத்தனை? எந்த வர்ணத்தில் யதி இருக்கவேண்டும் என்பதை யறிவிக்கும்.

இவ்விதம் ஆறு அங்கங்களோடு கூடின வேதத்தை யப்யஸிக்கவேண்டியது அவசியம்.

ஈசுவரன் முன் கல்பத்திலுள்ள வேதத்தை ஸ்மரித்து ரிஷிகளுக்கு உபதேசிக்கிருர்.

युगान्तेऽन्तर्हितान् वेदान् सेतिहासान्महर्षयः ।
लेभिरे तपसा पूर्वं अनुज्ञाताः स्वयम्भुवा ॥

என்ற வசனத்தால் கீழ்கூறிய கருத்து வெளியாகிறது. முக்கியமாய் இந்த வியாஸம் எழுதப்புகுந்ததற்குக் காரணம் யாதென்ருல் பிராம்மணர்கள் யாம் யாவரும் நமக்குரிய சாச்வதமான தர்மத்தைக் கைவிட்டு, பணத்தையே பெரிதாகக் கருதி ஏராள

மாய்ச் சம்பாதிக்கச் சாதனமென்று வேறுபாஷையில் மோகங் கொண்டு அதினுலும் ஒருப்லத்தை அடையாமலிருப்பதுடன் மதாந்திரங்களில் பற்றுள்ளவர்களாகிறோம். பாபங்களை மூட்டை மூட்டையாகக் கட்டுகிறோம். இனிமேலாவது விழித்துக் கொண்டு நம் வேதசாஸ்திரங்களைக் கற்றுணரவும் நம்மால் முடியாமற்போனால் நம் குழந்தைகளையாவது வேதசாஸ்திரங்களைக் கற்றுணரச் செய்யவுமாவது யத்தனிக்கவேண்டும் என்பதைக் கருதியே.

மேலும், இஹபரசாதனமான வேதத்தில் நாம் எவ்வளவுக் கெவ்வளவு அக்கரையுடன் இருந்து அத்யயனத்தில் யத்தனிப் போமோ அவ்வளவுக்கவ்வளவு பரமேச்வரன் நம்மிடம் கருணை கூர்ந்து ரக்ஷிப்பார் என்பதற்கு சிறிதேனுமையமேயில்லை. மேலும், நமது பரமாச்சார்யர்கள் இவ்விஷயத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அதற்கு உதவிபுரிகிறதால் நம் கார்யம் கைகூடும்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

மறுஜன்ம விசாரம்.

(ருஎஅ-வது பக்கத்தொடர்ச்சி.)

மூச்சுக்காற்றென்பது நாம் மூக்குவழியாய் உள் இழுத்து அதற்குத் தகுந்தபடி வெளிவிடும் ஒருகாற்று. அதுமட்டிலும் போவதாலும் இருப்பதாலும் நமக்கு யாதொரு பயனுமில்லை. மற்றும் மூச்சுக்காற்றை வெளியேவிடாமல் உள் அடக்கவும் வெளியில் விட்டு விட்டு உள் இழுக்காமலும் அதிகாரம் பெற்றவன் நமது தேகத்தினுள் வீட்டினுள் யஜமானன் போல் வசிப்பதாய்த் தெரிகிறது. இது எல்லோருக்கும் அனுபவ ஸித்தம். இத்தகையகாற்று பிராணன் அபானன் வ்யானன் உதானன் ஸமானன் என்று நமது தேகத்திலைந்து விடங்களில் ஸ்தானம்

பெற்றுஅங்கங்கு தனக்கேற்பட்ட கிருத்தியத்தால் பெயரை வைத்துக்கொண்டிருக்கின்றது. இவ்வைந்தையும் அடக்கியாளச் சக்தியுள்ளவன் ஒருவனிருக்கிறனென்றால் அவனைத்தான் ஜீவனென்பார் சாஸ்திரக்காரர். இச்சீவன் யாரென்றால்அவனைப் பிடித்து அலசிக்கழுவித் தேய்த்துப் பார்த்தால் அவன் தான் பரமாத்மா,ஆனந்தகனன்,நிர்விகாரன், நிர்விகற்பன், என்பதாதி நாமம் பெற்றவனுவான். அன்னுமமவன் பெறுகிறவரை அவன் ஜீவன்தான். அவன் சரீத்திற்குள்ளிருப்பான். அவன் வெளியேறுவான். இதிருக்கட்டும் இத்தகைய ஜீவன் மனமென்னும் மந்திரியை வைத்துக் கொண்டு தேகமென்னும் ரதத்திலேறி இந்திரியங்களென்னும் குதிரைகளைப் பூட்டி விஷயமென்னும் தேசங்களிற் சுதந்தரமாய் ஸஞ்சரித்து சுக துக்கத்தை அனுபவிக்கிறன். ஆனல் இச்சீவன் தேகமென்னும் ரதத்தை யடைந்திருந்தும் அவனும் யாரோ ஒருவனுக்குக் கட்டுப்பட்டு தனக்குக் கொஞ்சமும் ஸ்வதந்திரமில்லாமலே இருக்கிறன். ஏனெனில் இவன் ஸ்வதந்திரமுள்ளவனுயின் சுகத்தையே தனக்கு விரும்பிக்கொண்டு காரியங்களைச் செய்யும் போது அதற்குத் தகுந்த பலன் கிடையாமற் போவதுடன் விபரீதமான கஷ்டங்களையுமனுபவிக்கிறன். தான் இச் சரீரத்திலேயே சுகமாய் இருந்துகொண்டு பெண்டிர்பிள்ளைகளுடனும் மாடமாளிகைகளுடனும் சுகமனுபவிக்க வேண்டுமென்று ஸங்கற்பித்துக் கொண்டிருக்கும்போது ஜீவன் திடீரென பலாத்காரமாய் இழுக்கப்பட்டு இச்சபலத்தை விட்டகன்றுபோய்விடுகிறது. அப்போது யாரும் காப்பாற்ற முன்வரமாட்டான். ஆகையால் இச்சீவனையும் அடக்கியாளச் சக்தியுள்ளதொன்றிருக்கிறதென்று திண்ணமாய் நம்பவேண்டியதாயிற்று. இனி அது எதென்று விசாரித்தால் கன்மம் என்று இங்கு பொதுவாய் எடுத்துக்கொள்வோம். அதாவது கிரியை செய்கை என்று சொல்லலாம். அக்கிரியை எங்கிருந்து வந்ததென்றால் பிரதிசரீரத்திலும் நாம் தினந்தோறும் காலை யெழுந்தது முதல் இரவு உறங்குமளவும் செய்வதுதான். அப்படி ஏன் செய்கிறோம். எதற்காகச்செய்கிறோம். நாம் செய்யவேண்டாமென்று நினைத்

தாலும் நம்மையறியாமற் செய்யும்படி யாரோ ஒருவன் நமது மனதுக்குள் இருந்துகொண்டு தூண்டுவது போலிருக்கிறதே. ஆகவே அக்கன்மாவுக்கும் மேலானவனொருவனிருப்பதாய் வெளியாயிருக்கிறதேயிதென்ன ஆச்சரியம் என்று பார்த்தால் ஆச்சரியம்தான். ஆதல்பற்றியே அர்ஜுனன் கிருஷ்ணனை நோக்கி,

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥

இனி இம்மனிதன் தனக்கு விருப்பமில்லாவிடினும் பலாத்காரமாய் இழுத்துவிடப்பட்டு பாபத்தைச் செய்கிறானே கிருஷ்ணா இதென்ன காரணம் என்று கேட்டதற்கு நம்மிடமிருக்கும் இந்தக்காமமும் இந்தக்கோபமும் மகாபாபி இவனையே உனக்குப்பரமசத்ருவென்றறிஎன்று பதிற்கூறினர். இதனாலேற்பட்டதென்ன. இச்சன்மத்தில் நாம் சில சாஸ்திர ஸம்மதமில்லாதகாரியத்தை செய்தால் பாபம்தானென்று தெரிந்திருந்தும் ஏதோ நாம் பலவந்தமாய் அதிற் பிரவர்த்தித்துச் செய்கிறோம். பிறகு வருத்தமடைவதுமுண்டு. நாம் நியாயமில்லையென்று தெரிந்திருந்தும் என் பாபம் செய்யச் சொல்லுகிறதே என்கிறோம். அப்போது அந்தப்பாபம் இப்போது செய்யப் படுவதல்லவென்பதும் நிச்சயம். ஏனெனில் துக்கம் நேர்ந்தால் நான் முன்ஜன்மத்திலிப்படிப்பட்ட பாபத்தைச் செய்தேன். அதன் பாபத்தை இப்போதனுபவிக்கிறேனென்பான். மற்றொருவர் சுகியாய் இருக்கக் கண்டாலும் அவர் முன்ஜன்மத்திற் செய்த விசேஷபூஜாபலனென்கின்றனர். ஆகையால் இவ்வளவாலும் நமக்கேற்பட்டதென்ன வென்றால் இவ்வுயிர் இவ்வுடலை விட்டுப் பிரியுங்கால் மூச்சுக் காற்றுமட்டும் வெளியேருகிறதில்லை. அதற்கதிபதியான ஜீவன் சில பெயர்களோடு வெளியேறுகிறானென்பது விளங்குகிறது. அத்தகைய ஜீவனுடன் யார் வெளியேறுகின்றனரென்பதை சாஸ்திர மூலமாய்க் கவனிப்போம். சுபம்.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

அத்வைதஸபாபண்டிதரான பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி
சாஸ்திரிகளவர்களால் இவ்வருஷம் நடந்த
அத்வைதஸபையின் ஆரம்பதினத்தில்
உபந்யஸிக்கப்பட்ட

ஸ்ரீ பகவத்பாதாள் அவதாரமகிமை.

அத்வைத ஸபைப்பிரஸங்கங்களில் பிரதிவருஷமும் முதல் நாள் பிரஸங்கத்தில் நமது பரமாசார்யாளுடைய சரித்திரத்தையும் மஹிமையையும் பற்றி சொல்லுவது வழக்கமாயிருக்கிறது. ஆசார்யாளுடைய சரித்திரத்தைத் தெரிந்துகொள்வதனால் நமக்குப்பரம லாபமும் ச்ரேயஸ்ஸும் உண்டு. சரித்திரங்களை எழுதிக் காப்பாற்றிவைப்பது நமது அனுஷ்டானமில்லை என்று நவீனர்கள் நம்மை குறை கூறுவதுண்டு. அது சரியல்ல. நமது வேதங்களும், இதிஹாஸங்களும், புராணங்களும் சரித்திரமயமானவையே. மஹரிஷிகளின் சரித்திரங்களும் தார்மிகர்களான அநேக ராஜாக்களுடைய சரித்திரங்களும் அவைகளில் நிறம்பி யிருக்கின்றன. நமது மஹா காவ்யங்களிலும் அநேக சாஸ்திரங்கள் அமையப் பெற்றிருக்கின்றன. பூர்வகாலத்திலிருந்த மஹான்களுடைய ஞானங்களையும் ஆசாரங்களையும் அனுசரித்துத்தான் நமது ஞானங்களும் ஆசாரங்களும் ப்ரவிருத்திக்கின்றன. நமது இதிகாச புராணங்களில் சில சரித்திரங்கள் நிவிருத்தி மார்க்க பரர்களைப்பற்றி கூறுகின்றன. சிலசரித்திரங்கள் பிரவிருத்தி மார்க்க நிஷ்டர்களைப்பற்றிச் சொல்லுகின்றன. வேறு சிலவைகள் உலகத்தில் தர்ம ரக்ஷணார்த்தம் தோன்றிய பகவதவதாரங்களைப்பற்றி விஸ்தரிக்கின்றன. ராமாயணபாரத பகவதாதிகள் ராமகிருஷ்ணாத்யவதார சரித்திரங்களைப்பற்றிக் கூறுகின்றன. நமக்குஸத்ப்ரவிருத்தி உண்டாவதற்கு ஸத்துக்களின் சரித்திரச்ரவணம்தான் முக்கியகாரணம். நமது புராணங்களில் எங்கு பார்த்தாலும்

अत्राप्युदाहरन्तीममितिहासं पुरातनम् ।

என்று அநேக கதைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும். பூர்வர்களுடைய சரித்திரத்தில் எந்த அம்சங்கள் நமக்கு பிரயோஜனவத்தாகவும் ச்ரேயஸ் காரணமாகவும் ஆகக்கூடுமோ அவைகளை வெகு பக்தியுடன் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டாடுகிறோம். இதர அம்சங்கள் நமக்கு வேண்டுவதில்லை. காளிதாஸாதி கவிகள் வஸித்தகாலம் இன்னதென்று நாம் ஸரியாய்த்தெரிந்து கொள்வதில்லையென்று சொல்லுகிறார்கள். வாஸ்தவம். அதனால் ஹானியொன்றுமில்லை. அவர் எந்த வருஷம், எந்த மாதம், எந்த தேதியில் பிறந்தாலென்ன? அவர் செய்த மஹா காவியங்களை இன்னும் நாம் அனுபவிக்கவில்லையா? ஸாமான்யமான மனுஷ்ய தர்மத்தை அனுசரித்தோ, அர்த்த காம ஸம்பந்தமாகவே, கவிகள் சரித்திரத்தில் நிகழ்ந்தவைகளைப்பற்றி நாம் தெரிந்துகொள்வதில் பிரயோஜனமொன்றுமில்லை. ராஜாக்கள் ஆண்டதும், யுத்தங்கள் நடந்ததும், தேசங்கள் அழிந்ததும் இவைகளைப்பற்றி விஸ்தாரமாக எழுதி அதை சரித்திரம்என்று இதரர்கள் சொல்லுகிறார்கள். துஷ்டர்களால் ஏற்பட்ட கொலைகள், த்வம்ஸம், அபஹாரம் இவைகளை உண்மையாக நடந்தபடியே எழுதிவைத்துப் படித்தாலும் அதனால் அடையக்கூடிய பலன் என்ன? நமக்கும் அவர்களுக்கும் வித்தியாஸமாவது, நாம் கொண்டாடுவது ஸச்சரித்திரங்கள் மாத்திரம்தான்; அவர்கள் அவ்யவஸ்திதமாய் அஸச்சரிதங்களையும் ஆதரிக்கிறார்கள்.

ஸ்ரீபகவத்பாதாசார்யாளை ஈசுவராவதாரம் என்று சொல்லுகிறோம். शंकरः शंकरः साक्षात् என்று சொல்லப்படுகிறது. "மேலே இருந்து கீழே யிரங்குவது" என்று அவதார பதத்திற்கு அர்த்தம் வைகுண்டத்திலிருந்தோ, இந்த லோகத்திற்கு தர்மரக்ஷணார்த்தம் பகவான் அவதரிக்கிறார். உச்ச பதவியிலிருப்பவர் நீசஸ்தானத்தை அடைவதென்பதும் அவதார பதத்தின் பொருளாகும்.

(தொடரும்)